**PROCEEDINGS OF THE PUBLIC OF M/S. R.K. M SAND AND AGGREGATES ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F. NOS.70/4A & 70/5B AT MIDITHEPALLI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT HELD ON 05.11.2025 AT 11.00 AM ONWARDS AT M/S. P.V.R – L.M.R KALYANA MANTAPAM, NO. 344/1, 344/2, BERIKAI VILLAGE, THEERTHAM ROAD, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**PROJECT DETAILS:**

| S.No | THE PROPOSED CLUSTER MINES | QUARRY LEASE OVER AN EXTENT |
|---|---|---|
| 1. | M/s. R.K. M Sand and Aggregates Rough Stone and Gravel Quarry,<br>S.F. Nos.70/4A & 70/5B<br>Midithepalli Village,<br>Shoolagiri Taluk,<br>Krishnagiri District. | 3.76.67 HA |

**PRESENT:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thirumathi.D.R.GeethaRani., DSO | : | District Supply Officer, Krishnagiri (Deputy Collector - Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. T.Senthil Kumar | | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Thiru.D.RaviKumar | : | The Proprietor<br>M/s. R.K. M Sand and Aggregates Rough Stone and Gravel Quarry |
| 5. | Thiru. P.Gopinath | | EIA Consultant,<br>M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai |
| 6. | Public | : | 90 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed District Supply Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the M/s. R.K. M Sand and Aggregates Rough Stone and Gravel Quarry, lease over an extent of 3.76.67 Ha S.F. Nos.70/4A & 70/5B Midithepalli Village, Shoolagiri Taluk, Krishnagiri District. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 04.10.2025 and pamphlets regarding public hearing were issued to the public of Midithepalli Village, Athimugam Village, Punagaram Village and Gollapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same along with the Minutes of the Meeting will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The District Supply Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the project proponent was requested to explain about their proposed Rough Stone and Gravel Quarry project through power point presentation.

Thereafter, Thiru.P. Gopinath, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai of the proposed Rough Stone and Gravel quarry project has made presentation about the proposed Rough Stone and Gravel quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone and Gravel quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru.Moorthy, Midithepalli Village :**

Thiru. Moorthy stated that he has no objection to the quarry establishment. He requested that heavy vehicles be driven slowly. Furthermore, he advised that water sprinklers be used on the dirt roads. He also requested that employment opportunities be provided to the local people.

2. **Thiru. Naveen, Venkatesapuram Village:**

Thiru.Naveen requested that heavy vehicles be driven slowly, especially in school areas. He also requested that employment opportunities be provided to the youth in the surrounding areas

3. **Thiru. Venkatesh, NGO:**

Thiru. Venkatesh welcomed the quarry project, stating that the construction work will develop through the M-sand and P-sand produced by the quarry. He requested that 20% of the employment opportunities be reserved for local people. He also appealed to the quarry owner to plant 1858 saplings as per the advice of the Environmental Impact Assessment Authority and specifically requested to avoid planting trees like Conocarpus. Finally, he requested that the quarry be granted a license in compliance with the rules and regulations of the Tamil Nadu Pollution Control Board (TNPCB).

4. **Thiru. Munikrishnan, NGO:**

Thiru. Munikrishnan requested the owners to operate the quarry in a manner that does not affect the environment or the water bodies of the nearby villages, although the creation of pollution during quarry operation is normal. He also requested the protection of groundwater. He further requested the quarry owner to plant more saplings to prevent excessive airborne pollutants from the quarry, which could cause health issues for the villagers. He also asked for priority to be given to the local people in employment opportunities in the surrounding areas. He conveyed his opinion in English.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 13 number of petitions were received on the proposed Rough Stone and Gravel quarry during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone and Gravel quarry project and no email representation was received in the. O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

13/11/25

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

13.11.25

**District Supply Officer**
**Krishnagiri**

3/7

**District Collector**
**Krishnagiri**

3/7

**கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், மிடிதேபள்ளி கிராமம், புல. எண். 70/4A & 70/5B உத்தேசிக்கப் பட்ட ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி – சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 05.11.2025 அன்று, முற்பகல் 11.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், பேரிகை கிராமம், தீர்த்தம் மெயின் ரோடு எண். 344/1, 344/2, இல் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபத்தில் – நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்:**

**திட்ட விவரங்கள்:**

| வ. எண் | முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம் | குவாரியின் அளவு (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1. | தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, புல. எண். 70/4A & 70/5B, மிடிதேபள்ளி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 3.76.67 |

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. D.R.கீதாராணி., DSO | : | மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். (துணை ஆட்சியர் – மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er. த.செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு.D.ரவிக்குமார் | : | உரிமையாளர், தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி. |
| 5 | திரு.P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர், தி/ள். ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| 6 | பொதுமக்கள் | : | 90 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது). |

திரு/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், பொதுமக்கள் மற்றும் திரு/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 04.10.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மிடுதேப்பள்ளி கிராமம், அத்திமுகம் கிராமம், புன்னாகரம் கிராமம் மற்றும் கொல்லப்பள்ளி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிக்கு உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள்

தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அவர்கள், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P. கோபிநாத் தி/ள். ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு . மூர்த்தி மிடுதேபள்ளி கிராமம்:**

திரு. மூர்த்தி அவர்கள், குவாரி வருவதனால் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார். கனரக வாகனங்களை மெதுவாக இயக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் மண் சாலைகளில் நீர்தெளிப்பான்கள் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்குமாறு கோரிக்கை வைத்தார்.

2. **திரு. நவீன் வெங்கடேசபுரம் கிராமம்**

திரு. நவீன் அவர்கள், கனரக வாகனங்களை மெதுவாக இயக்குமாறும் குறிப்பாக பள்ளி பகுதிகளில் மெதுவாக இயக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

3. **திரு . வெங்கடேஷ் தன்னார்வலர்:**

திரு. வெங்கடேஷ் அவர்கள், இக்குவாரி திட்டத்தை வரவேற்பதாகவும் குவாரியினால் உருவாக்கப்படும் எம் சாண்டு மற்றும் பி சாண்டு மூலம் கட்டுமான பணிகள் வளர்ச்சியடையும் என்றும் கூறினார். உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் 20 சதவீதம் ஒதுக்குமாறு கோரிக்கை வைத்தார். சுற்று சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய அறிவுரையின் படி 1858 மரக்கன்றுகள் நடவேண்டும் எனவும் அதில் கோனோகார்பஸ் போன்ற மரங்கள் நடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் குவாரி உரிமையாளரிடம் வேண்டுகோள் வைத்தார். தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் விதிமுறைகளுக்கு உட்பட்டு குவாரிக்கு உரிமம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இவ்வாறு, தன் கருத்தை அவர் ஆங்கிலத்தில் தெரிவித்தார்.

4. **திரு. முனிகிருஷ்ணன் தன்னார்வலர்:**

திரு. முனிகிருஷ்ணன் அவர்கள், குவாரியை இயக்கும் போது மாசு உருவாவது இயல்பானது என்றபோதிலும் சுற்றுசூழலை பாதிக்காதவாறும், அருகில் உள்ள கிராமங்களின் நீர்நிலைகளுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறும் குவாரியை இயக்குமாறு உரிமையாளர்களிடம் வேண்டுகோள் வைத்தார். மேலும் நிலத்தடி நீரை பாதுகாக்கவும் கேட்டுக்கொண்டார். குவாரியின் மூலமாக காற்றில் பரவும் அதிகப்படியான மாசுக்கள் கிராமமக்களுக்கு நோய் பாதிப்பை உண்டாக்கலாம், எனவே அதை தடுக்க குவாரி உரிமையாளர் அதிகப்படியான மரகன்றுகள் நட வேண்டும் எனவும் வேண்டுகோள் வைத்தார். மேலும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்குமாறும் கேட்டுக்கொண்டார். இவ்வாறு அவர் தன் கருத்தை ஆங்கிலத்தில் தெரிவித்தார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 13 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். ஆர்.கே.எம் சாண்ட் & அக்கிரிகேட்ஸ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து

மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

13/11/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

13.11.25

**துணை ஆட்சியர் (DSO)**
**கிருஷ்ணகிரி**

5/7

14/11/25

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

5/7